**D.V.C. 36 of 2016** **Previous Date : 20.12.2019**

**PW1**

**காயத்ரி க/பெ.அருண்குமார்**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 08.05.2026.**

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**1.** **இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாரரை மன நல மருத்துவமனைக்கு அழைத்து செல்ல அறிவுறுத்தப்பட்டு அதன் அடிப்படையில் நான் 1ம் எதிர்மனுதாரரை மன நல மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் சரிதான். பெங்களூரில் நானும், 1ம் எதிர்மனுதாரரும் மட்டும் தான் இருந்தோம் என்றால் ஆமாம், எங்கள் குழந்தையும் சேர்ந்து இருந்தோம். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு மன நல மருத்துவமனைக்கு 1ம் எதிர்மனுதாரரை அழைத்து சென்று பரிசோதனை செய்த பின்பு அவருக்கு மருந்துகள், மாத்திரைகள் பரிந்துரைக்கப்பட்டது என்றாலும் அதனை 1ம் எதிர்மனுதாரர் உட்கொண்டு வருகிறார் என்றாலும் பரிந்துரைக்கப்பட்டது என்பது தெரியும், உட்கொண்டு வருகிறார் என்று தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் எனது விருப்பத்தின் அடிப்படையில் தான் பழனியில் ஒரு சொத்து வாங்கினார் என்றால் சரிதான். அந்த சொத்து வாங்குவதற்கு 2ம் எதிர்மனுதாரர் பண உதவி எதுவும் செய்தாரா என்றால் அது எனக்கு தெரியாது, என் கணவர் என்னிடம் சொல்வதில்லை. அந்த சொத்து என் கணவரின் முழு பணத்தில் இருந்து வாங்கினார்களா என்றால் அது எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு பழனியில் என்னை தவிர உறவினர் யாரும் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் இதுவரைக்கும் விவாகரத்து கேட்டோ, பிரிந்து செல்வதாகவோ வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வழக்கு தாக்கல் செய்யவில்லை, பேசினார்கள். தற்போதும் 1ம் எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேனா என்றால் ஆமாம், தயாராக இருக்கிறேன். தற்போது சமரச மையத்திற்கு சென்று பேசுவதற்கு எனக்கு ஆட்சேபனை இருக்கிறதா என்றால் ஏற்கனவே இரண்டு தடவை போய் வந்தோம், தற்போது ஆட்சேபனை இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு கொரோனா காலம் தவிர இதுவரைக்கும் எனக்கும், குழந்தைக்கும் எனது கணவர் இடைக்கால ஜீவனாம்சம் தருகிறார் என்றால் நான் என் கணவரிடம் கேட்டேன், ஆனால் என் மாமனார் செலுத்துகிறார். 2016க்கு பிறகு Depression காரணமாக எனது கணவருக்கு வேலை எதுவும் இல்லை என்றால்**

நடுவில் ஒரு சிறு காலம் திருவண்ணாமலை அருகில் வேலைக்கு சேர்ந்ததாக சொன்னார், ஆனால் அதுவும் சரியில்லை என்று திரும்பி வந்துவிட்டார். தற்போது 1ம் எதிர்மனுதாரர் மனநிலை சரியாகி இருக்கிறார் என்றால் மருத்துவ ரீதியாக என்னால் சொல்ல இயலாது, முன்பு இருந்ததை விட தற்போது பரவாயில்லை, ஆனால் இந்த நிலை நிரந்தரமானது இல்லை என்று மருத்துவர் சொல்லியுள்ளார். மனைவி என்ற முறையில் 1ம் எதிர்மனுதாரருக்கு செய்ய வேண்டிய கடமைகளை நான் செய்ய தவறிவிட்டேன் என்றாலும் அதனால் தான் 1ம் எதிர்மனுதாரர் இந்த நிலைமைக்கு வந்துவிட்டார் என்றாலும் சரியல்ல. என்னை வெளிநாட்டில் 1ம் எதிர்மனுதாரர் படிக்க வைத்தார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் எனக்கு பொருளாதார அளவில் நல்ல வசதியான வாழ்க்கையை தான் கொடுத்திருந்தார் என்றால் பிரச்சனையாகும் முன்பு வரை அப்படி தான் இருந்தார். 1ம் எதிர்மனுதாரர் மன நலன் சரியில்லாமல் இருந்ததால் தான் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் 1ம் எதிர்மனுதாரருக்கு அந்த நேரத்தில் என்ன நடந்தது என்று தெரியாத அளவிற்கு தான் மன நிலை இருந்தது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.05.08 18:06:38 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.